# DEPOSITION OF WITNESS

(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE NO.1, SANKARI.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Case No | : | CC.53/2023 | Date | : | 23.09.2025 |
| Deposition of Witness for | : | அ.சா.8 | Taluk | : | |
| Name | : | திரு.அப்பு | Calling | : | |
| Father/Husband Name | : | | Religion | : | |
| Village | : | | Age | : | |

Solemnly affirmed in accordance with the Provisions of Act X of 1873 on the day of 23.09.2025.
(எதிரி ஆஜர். எதிரியின் வழக்கறிஞர் ஆஜர்).

**அரசு தரப்பு முதல் விசாரணை** :

1) நான் சேலம் மாவட்ட காவல்துறையில் காவல் உதவி ஆய்வாளராக பணிசெய்து, தற்போது பணி ஓய்வு பெற்று எனது குடும்பத்தாருடன் கொங்கணாபுரத்தில் வசித்து வருகிறேன். கடந்த 06.10.2022 ஆம் தேதி, இரவு 20.00 மணிக்கு நான் தேவூர் காவல் நிலையத்தில் காவல் உதவி ஆய்வாளராகப் பணிபுரிந்தபோது, முன்னதாக பவானி காலிங்கராயன்பாளையம் ராஜா ஸ்ரீ தனியார் மருத்துவமனையிலிருந்து கிடைக்கப்பெற்ற தகவலின் பேரில் நிலைய தலைமை காவலர்-749, திரு.ஞானசேகரன் என்பவர் அங்கு சென்று உள்நோயாளியாக சிகிச்சையில் இருந்த சுப்பிரமணி என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து நிலையம் வந்து, ஒப்படைத்த புகார் வாக்குமூலத்தின் பேரில் தேவூர் காவல் நிலைய குற்ற எண் 105/2022, சட்டப்பிரிவுகள் 294(b), 324, 506(ii) இதச- ஆகிய பிரிவுகளின் கீழ் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்து, முதல் தகவல் அறிக்கையின் அசலை,

வாதியின் புகார் வாக்குமூலத்துடன் இணைத்து கனம் குற்றவியல் நீதித்துறை நடுவர் எண்.1, சங்ககிரி நீதிமன்றத்திற்கும், மற்ற நகல்களை சம்பந்தப்பட்ட உயர் அதிகாரிகளுக்கு அனுப்பி வைத்துள்ளேன். (**முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.6 ஆக குறியீடு செய்யப்படுகிறது**).

2) பின்னர், கடந்த 07-10-2022 ம் தேதி, காலை சுமார் 07.00 மணிக்கு சம்பவ இடம் சென்று சம்பவயிட சாட்சிகளான பெருமாள் மற்றும் அண்ணாமலை ஆகியோர்கள் முன்பாக சம்பவ இடத்தை பார்வையிட்டு மாதிரி வரைபடம் வரைந்து பார்வை மகஜர் தயார் செய்து சாட்சிகளிடம் சாட்சி கையொப்பம் பெற்றேன். (**மாதிரி வரைபடம் அ.சா.ஆ.7 ஆக குறியீடு செய்யப்படுகிறது**). பின்னர், சாட்சிகளான தனசேகரன், செந்தில், நாராயணன், பெருமாள், அண்ணாமலை ஆகியோர்களை விசாரித்து தனித்தனியாக வாக்குமூலம் பதிவு செய்தேன்.

3) பின்னர், அன்றைய தினமே, எதிரி சம்பவ இடத்தில் விட்டுசென்ற மகேந்திரா டிராக்டர் வாகனத்தை சாட்சிகள் பெருமாள் மற்றும் அண்ணாமலை ஆகியோர் முன்னிலையில் கைப்பற்றுதல் மகஜர் மூலம் கைப்பற்றி சாட்சிகளிடம் சாட்சி கையொப்பம் பெற்றேன். (**கைப்பற்றுதல் மகஜர் அ.சா.ஆ.8 ஆக குறியீடு செய்யப்படுகிறது**).

4) பின்னர், சாட்சிகளை விசாரணை செய்ததில் சம்பவம் நடந்தது உண்மையென தெரிந்து எதிரியை தேடிவந்த நிலையில் எதிரி சின்னதுரை, என்பவர் மாண்புமிகு உயர்நீதிமன்றத்தில் முன்பிணை பெற்றுவிட்டதால் அவரை கைது செய்ய இயலவில்லை.

5) பின்னர், கடந்த 17-12-2022 ம் தேதி, காயமடைந்த சுப்பிரமணி, என்பவருக்கு சிகிச்சை அளித்த ஈரோடு மணியன் மெடிக்கல் சென்டர் என்ற தனியார் மருத்துவமனையின் மருத்துவர் திரு.செந்தில்குமரன் என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து, சுப்பிரமணி என்பவரின் விபத்து பதிவேட்டு அறிக்கை மற்றும் காயச்சான்றிதழைப் பெற்றேன்.

6) பின்னர், சுப்பிரமணி என்பவருக்கு ஏற்பட்ட காயம் கொடுங்காயம் என மருத்துவர் சான்று வழங்கியதால் இவ்வழக்கின் சட்டப்பிரிவுகள் 294(b), 324, 506(ii) இதச-பிரிவுகளிலிருந்து சட்டப்பிரிவுகள் 294(b), 326, 506(ii) இதச- பிரிவாக மாற்றம் செய்து, சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கையை கனம் குற்றவியல் நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தேன். **(சட்டப்பிரிவு மாறுதல் அறிக்கை அ.சா.ஆ.9 ஆக குறியீடு செய்யப்படுகிறது).**

7) பின்னர், கைப்பற்றிய வழக்கு சொத்தை படிவம்-91ன் மூலம் கனம் நீதிமன்றத்திற்கு அனுப்பி வைத்தேன். **(படிவம்-91 அ.சா.ஆ.10 ஆக குறியீடு செய்யப்படுகிறது).** அத்துடன் இவ்வழக்கின் புலன்விசாரணை முடித்து எதிரியின் மீது சட்டப்பிரிவுகள் 294(b), 326, 506(ii) இதச-ஆகிய பிரிவுகளின் கீழ் கனம் நீதிமன்றத்தில் குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்தேன்.

**குறுக்கு விசாரணை**:

1) 05-10-2022 ம் தேதி, காலை 10.00 மணிக்கு சம்பவம் நடந்து முதல் தகவல் அறிக்கை 06-10-2022 ம் தேதி, 20.00 மணிக்கு முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான். 18-10-2022 ம் தேதி தான் முதல் தகவல் அறிக்கை நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்டுள்ளதுஎன்றால் சரிதான். 13 நாட்கள்

காலதாமதமாக தான் நீதிமன்றத்திற்கு முதல் தகவல் அறிக்கை அனுப்பி வைத்ததற்கு குறிப்பிட்டு காரணம் உள்ளதா என்றால் இல்லை. புகார்தாரர் பவானி காளிங்கராயன்பாளையத்தில் உள்ள ராஜா ஸ்ரீ மருத்துவமனையில் சிகிச்சை பெற்றபோது மேற்படி, மருத்துவமனையில் இருந்து காவல் நிலையத்திற்கு கொடுத்த காயத்தகவலை நான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை.

2) கடந்த 19-10-2022ம் தேதி, ஈரோடு மணியன் மெடிக்கல் சென்டர் மருத்துவமனையில் இருந்து கிடைக்கபெற்ற காயத்தகவலை தான் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். எந்த மருத்துவமனையில் இருந்து கிடைக்கப்பெற்ற இன்டிமேசன் பேரில் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் பவானி காளிங்கராயன்பாளையத்தில் உள்ள ராஜா ஸ்ரீ மருத்துவமனையில் இருந்து கிடைக்கப்பெற்ற இன்டிமேசன் பேரில் முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டுள்ளது.

3) சம்பவ சமயத்தில் சங்ககிரி காவல் நிலையத்தில் சிறப்பு காவல் உதவி ஆய்வாளராக பணிபுரிந்த திரு.சண்முககுமார், என்பவர் அ.சா.1ன் சம்மந்தி என்றால் சரிதான். அவரின் தூண்டுதலின் பேரில் தான் இந்த புகார் கொடுக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. நான் சம்பவ இடம் சென்று பார்த்தபோது டிராக்டர் எதிரியின் நிலத்தில் தான் இருந்தது என்றால் சரிதான். பட்டியல் சாட்சிகள் 01 முதல் 06 வரையிலானவர்கள் அ.சா.1ன் உறவினர்கள் என்றால் சரிதான். அ.சா.1 எனது விசாரணையில் டிராக்டர் தனது தோள்பட்டையில் ஏறி நுரையீரலில் ரத்த கசிவு ஏற்பட்டது என சொல்லியுள்ளாரா என்றால் டிராக்டர் தோள்பட்டையில் ஏறியதாக குறிப்பிட்டுள்ளார், நுரையீரலில் ரத்த கசிவு ஏற்பட்டதாக குறிப்பிட்டு சொல்லவில்லை.

4) அ.சா.1 எனது விசாரணையில் என்மீது மோதிய டிராக்டர் சிவப்பு நிறமாக இருந்தது என்பதையும், பதிவு எண்ணையும் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். அ.சா.2 எனது விசாரணையில் எதிரி டிராக்டரை ஏற்றி உயிரோடு விடமாட்டேன் என கூறினார் என்றும், எனது தந்தைக்கு தோள்பட்டையில் எலும்பு முறிவு ஏற்பட்டதாகவும், நெஞ்சு எலும்பில் மூன்று எலும்பு முறிவும், நுரையீரலில் இரண்டு எலும்பு முறிவும் ஏற்பட்டதாக குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். அ.சா.2 எனது விசாரணையில் எனது தந்தையின்மீது ஏற்றிய வாகனம் மகேந்திரா 595 என்றும், சிவப்பு நிறம் கொண்டது என்றும், அதன் பதிவு எண்ணையும் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான்.

5) அ.சா.3 எனது விசாரணையில் சின்னதுரையின் டிராக்டர் வெண்டைக்காய்நிலத்திற்கு சென்றுவிட்டது, நான் உடனே அருகில் சென்று பார்த்தபோது தனசேகர் டிராக்டரின் முன்சக்கரத்திற்கும், பின்சக்கரத்திற்கும் இடையே மாட்டிகொண்டிருந்த அவரது அப்பா சுப்ரமணியத்தை இழுத்துகொண்டிருந்தார் என்று குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். அ.சா.3 எனது விசாரணையில் எதிரி டிராக்டரில் இருந்து வந்து அ.சா.1 யும், அ.சா.2 யும் பார்த்து செத்து தொலைங்கடா தேவடியா பையா என்று கூறிவிட்டு ஓடிவிட்டார் என்று குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான். அ.சா.3 எனது விசாரணையில் ஏற்றிய வாகனம் மகேந்திரா 595 என்றும், சிவப்பு நிறம் கொண்டது என்றும், அதன் பதிவு எண்ணையும் குறிப்பிட்டு சொல்லவில்லை என்றால் சரிதான்.

6) நான் சொன்னவாறு, சொன்ன தேதியில், சொன்ன இடத்தில் சென்று பார்வை மகஜர்மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்யவில்லை என்றும், பவானி காளிங்கராயன்பாளையத்தில் உள்ள ராஜா ஸ்ரீ மருத்துவமனையில் சிகிச்சை பெற்ற அ.சா.1-டம் புகார் வாக்குமூலம் எதுவும் பெறவில்லை என்றும், சங்ககிரி காவல் நிலையத்தில் சிறப்பு காவல் உதவி ஆய்வாளராக பணிபுரிந்த திரு.சண்முககுமார், என்பவரின் தூண்டுதலின் பேரில் எதிரிமீது பொய் புகார் பெற்று குற்ற இறுதி அறிக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. சம்பவத்திற்கு முதல்நாள் அ.சா.1 அவரது நிலத்தில் மாட்டை வைத்து உழவு செய்துகொண்டிருக்கும்போது அந்த மாடு மிதித்து தான் காயம் ஏற்பட்டுள்ளது என்றால் சரியல்ல. டிராக்டர் ஏற்றி அ.சா.1 க்கு காயம் எதுவும் ஏற்படவில்லை என்றால் சரியல்ல.

7) எதிரியின் டிராக்டரை அவரது நிலத்தில் இருந்து எடுத்து வந்து வழக்கிற்காக தயார் செய்துள்ளோம் என்றால் சரியல்ல. அ.சா.1 ஐ நான் எந்த தேதியில், எங்கு வைத்து விசாரித்தேன் என்றால் விசாரிக்கவில்லை. பவானி காளிங்கராயன்பாளையத்தில் உள்ள ராஜா ஸ்ரீ மருத்துவமனை மருத்துவரை நான் இந்த வழக்கில் விசாரணை செய்யவில்லை என்றால் சரிதான். அ.சா.1 அவர் சொன்ன தேதியில் பவானி காளிங்கராயன்பாளையத்தில் உள்ள ராஜா ஸ்ரீ மருத்துவமனைக்கு சிகிச்சை பெறவில்லை என்றும், அ.சா.1 ஈரோடு மணியன் மெடிக்கல் சென்டர் மருத்துவமனையில் தான் முதன் முதலில் சிகிச்சையில் சேர்ந்தார் என்றால் சரியல்ல.

8) அங்கிருந்து தான் காயத்தகவல் காவல்நிலையத்திற்கு வந்தது என்றால் சரியல்ல. நான் காயத்தகவல் பெற்ற பின்பும் ஈரோடு மணியன் மெடிக்கல் சென்டர் மருத்துவமனை சென்று அ.சா.1ஐ விசாரிக்கவில்லை என்றால் சரியல்ல. இதற்கு முன்பு எதிரிமீது அ.சா.1 வேறு புகார் எதுவும் கொடுக்கவில்லை என்றால் சரிதான். அ.சா.1க்கும், எதிரிக்கும் என்ன பிரச்சனை என்று விசாரிக்கவில்லை என்றால் சரியல்ல, நிலப்பிரச்சனை என்று கூறினார்கள். நான் சரிவர புலன் விசாரணை செய்யாமல் எதிரிமீது பொய்யாக வழக்கு பதிவு செய்துள்ளேன் என்றால் சரியல்ல. எதிரிக்கும், இந்த வழக்கிற்கும் சம்பந்தம் இல்லை என்றால் சரியல்ல.

Sd/-S.Sathiya,
Judicial Magistrate No.1,
Sankari.

Sd/-Appu